ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2090/18 - 2018 සැප්තැම්බර් මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.09.27

*2090/18 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 1/2007*

**1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைத் தாதிமார் பேரவைச் சட்டம்**

*1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைத் தாதிமார் பேரவைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.*

வைத்திய கலாநிதி ராஜித சேனாரட்ன,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர்.

கொழும்பு,
2018, செத்தெம்பர் 17.

ஒழுங்குவிதிகள்

இவ்வொழுங்கு விதிகள் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இலங்கைத் தாதிமார் பேரவை (பேரவை உறுப்பினர்களின் பட்டப்பின் படிப்புத் தகைமைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (அ) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (ii), (iii), (iv) மற்றும் (v) என்னும் உட்பிரிவுகளின் நோக்கங்களுக்காக, “விதித்துரைக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு தகைமை” என்னும் சொல்லானது, இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட, இலங்கையில் அல்லது அதற்கு வெளியிலுள்ள ஏதேனும் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட, இயைபான தாதித்தொழில் துறையில் ஏதேனும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, முதுமாணிப் பட்டம் அல்லது கலாநிதிப் பட்டம் (பிஎச்.டி) எனப் பொருள்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய பட்டப்பின் படிப்புத் தகைமையுடனான ஆள் இல்லாதவிடத்து, இலங்கைத் தாதிமார் பேரவையானது, முறையே இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (ii), (iii), (iv) மற்றும் (v) என்னும் உட்பிரிவுகளின் நோக்கங்களுக்காக, விடயத்திற்கேற்ப, தாதித்தொழில் பின்படிப்பு ஆரம்ப நிலை பாடசாலையினால் வழங்கப்பட்ட கற்பித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் திப்புளோமா ஒன்றை அல்லது பொதுச் சுகாதார தாதியம் திப்புளோமா ஒன்றை அல்லது வாட்டு முகாமைத்துவ திப்புளோமா ஒன்றை அல்லது இலங்கைத் தாதிமார் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட அதற்குச் சமனான வேறு ஏதேனும் தகைமையை ஏற்றுக்கொள்ளலாம்.

1A - PG 4248 — 517 (2018/09)
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி, இவ்வொழுங்கு விதிகளின் நோக்கங்களுக்காக -

"சட்டம்" என்பது, 1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைத் தாதிமார் பேரவைச் சட்டம் எனப் பொருள்படும்.

"தாதித்தொழில் பின்படிப்பு ஆரம்பநிலை பின் படிப்பு பயிற்சி பாடசாலை என்பது சுகாதார அமைச்சின் கீழ் வருவதும் ஒன்றில் மருத்துவிச்சித் தொழில் அல்லது உள மருத்துவத் தாதியம் மற்றும் வாட்டு முகாமைத்துவம், படிப்பித்தல் மற்றும் மேற்பார்வை மற்றும் பொதுச் சுகாதாரத் தாதியமும் மேற்பார்வையும் ஆகியவற்றினை உள்ளிட்ட பதினெட்டு மாத காலத்தினைக் கொண்டதொரு காலப்பகுதிக்குப் பயிற்றுவித்து இயைபான டிப்ளோமாத (ஆரம்ப பின்படிப்பு திப்புளோமா) ஒன்றினை வழங்குவதும் மற்றும் தாதியம் தொடர்பான ஏனைய விசேட பயிற்சி நெறிகளையும் நடத்துவதும் இயைபான திப்புளோமாக்களையும் வழங்குவதுமான ஓர் நிறுவனம் ஆகும்.

10-317

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.